சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 31.12.2018

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் மார்கழி மாதம் 28–ம் நாள் (டிசம்பர் திங்கள் 31–ம் நாள்:–31.12.2018) திங்கள் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

## பொருள் எண்.01

சின்னமனூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட காலனி நகராட்சி துவக்கப்பள்ளியில் உள்ள ஆழ்துளை குழாயின் மோட்டார் பழுதடைந்து, ஆழ்துளை குழாயை மரத்தின் வேர்கள் புகுந்து அடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்ய போர்வெல் ப்ரெஸ்சிங் செய்து, சின்டெக்ஸ் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.35000/– (ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்காணும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.7708/2018/இ2). |
| தீர்மான எண், நாள் | 549, நாள்.31.12.2018 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.02

இந்நகராட்சியிலிருந்து கோயம்புத்தூர் நகரியில் பயிற்சி நிறுவனத்திற்கு 2018–2019ம் நிதியாண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்திர பங்களிப்பு தொகை ரூ.20000/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8119/2018/சி1) |
| தீர்மான எண், நாள் | 550, நாள்.31.12.2018 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.03

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு வெளியேறும் கழிவு நீரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் சோதனை மேற்கொண்ட வகையில் ஆன செலவினம் ரூ.2210/–ஐ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தேனி அலுவலக கடிதத்தில் கேட்டுள்ளனர். எனவே மேற்கண்ட செலவினத் தொகையினை வங்கி வரைவோலையாக எடுத்து மாவட்ட சுற்றுச் சூழல் அலுவலர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியில் இருந்து செலவினத்தை ஈடு செய்யலாம். (ந.க.எண்.4229/2002/இ1). |
| தீர்மான எண், நாள் | 551, நாள்.31.12.2018 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.04**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் வாகன எண்.TN60T4228க்கு தகுதி சான்று பெறும் பொருட்டு 2018–2019ம் ஆண்டிற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.150000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.8432/2018/எச்1) |
| தீர்மான எண், நாள் | 552, நாள்.31.12.2018 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சியில் அலுவலகப் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60S2751க்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70500/– (ரூபாய் ஏழுபதாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் (ந.க.எண்.6260/2014/இ2). |
| தீர்மான எண், நாள் | 553, நாள்.31.12.2018 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.06**

இந்நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு காந்தி நகர் காலனி 7வது தெரு மற்றும் பொட்டிமாரியம்மன் கோவில் தெரு பகுதியில் குடிநீரை சீரான முறையில் விநியோகம் செய்ய குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.200000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (ம) வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6561/2018/இ2). |
| தீர்மான எண், நாள் | 554, நாள்.31.12.2018 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

பொருள் எண்.07

இந்நகராட்சிக்கு சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016 மற்றும் தரைவாடகை அடிப்படையில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், நகர்மன்றத் தீர்மானம் எண்.484, நாள்.28.09.2018ன்படி, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 17 கடைகளை 28.12.2018ம் தேதி மறு முன் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில், 3 கடைகள் மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கோர முன்வந்துள்ளனர். இதர இனங்களுக்கு எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை. வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (தொகை) |
|---|---|---|---|
| 1 | 11 | K.M.நசீர் அகமது, 12,ஹாஸ்பிட்டல் ரோடு, விழுப்புரம் | ரூ.2250/– |
| 1 | 11 | M.முகமது அபுபக்கர், த/பெ.ரா.முஹமத் பிலால், 176/13ஏ, வார்டு எண்.24, மெயின் ரோடு, எழில்நகர், சின்னமனூர் | ரூ.2200/– |
| 2 | 12 | M.முகமது அபுபக்கர், த/பெ.ரா.முஹமத் பிலால், 176/13ஏ, வார்டு எண்.24, மெயின் ரோடு, எழில்நகர், சின்னமனூர் | ரூ.2200/– |
| 2 | 12 | மு.பரதன், 121, காலனி திம்மிநாயக்கன்பட்டி, பொட்டிபுரம் போஸ்ட் | ரூ.2000/– |
| 3 | 29 | பா.தெய்வேந்திரன், த/பெ.பாண்டியராஜ், வார்டு எண்.2, கதவு எண்.44, பொன்னகர், சின்னமனூர் | ரூ.2250/– |

அலுவலகக் குறிப்பு:–

1. கடை எண்.11, ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்சமாக மாத வாடகை ரூ.2250/– கோரியுள்ள திரு.கே.எம்.நசீர் அகமது, 12, ஹாஸ்பிட்டல் ரோடு, விழுப்புரம்–ஐ மன்றம் ஏற்கலாம்.
2. கடை எண்.12, ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்சமாக மாத வாடகை ரூ.2200/– கோரியுள்ள மு.முகமது அபுபக்கர் த/பெ.முஹமத்பிலால், 176/13ஏ, வார்டு எண்.24, மெயின் ரோடு, எழில் நகர், சின்னமனூர்–ஐ மன்றம் ஏற்கலாம்.
3. கடை எண்.29க்கு 11 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கலந்து கொள்ள முன்வராதநிலையில் தற்போது ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் திரு.பா.தெய்வேந்திரன் த/பெ.பாண்டியராஜ் வார்டு எண்.2, பொன்னகர், சின்னமனூர்–ஐ உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ.2250/– கோரியுள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.370/2017/அ2).

**தீர்மான எண், நாள்** **555, நாள்.31.12.2018**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாமிகுளம் 1வது தெரு, சேக்மைதீன் தெரு, தெற்குத் தெரு, தெற்கு முஸ்லீம் தெரு, காளவாசல் தெரு, வெள்ளையன் தெரு, பட்டாளம்மன் கோவில் தெரு ஆகிய தெருக்களில் உள்ள சிறு மின்விசை பம்புகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 7 எண்ணம் கொண்ட மோட்டார் ஸ்டார்டர் பழுதடைந்து விட்டதால் புதிய மோட்டார் ஸ்டார்ட்டர் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.50000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (ம) வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6130/2016/இ2).** |
| **தீர்மான எண், நாள்** | **556, நாள்.31.12.2018** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.09

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் 22ல் தண்ணீர் வசதி, மின் வசதி, குழாய் இணைப்பு மற்றும் சிறு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 07.09.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.10% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.25% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.10%) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2664/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **557, நாள்.31.12.2018** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

பொருள் எண்.10

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பிரிண்டர்கள் விநியோகம் செய்யும் பணி மற்றும் கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| பணியின் பெயர் | 1. பிரிண்டர்கள் விநியோகம் செய்யும் பணி | |
|---|---|---|
| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
| 1. | மெர்குரி சாப்ட்வேர் நிறுவனம் | ரூ.9500.00 |
| 2. | யுனைடேட் இன்போ டெக் நிறுவனம் | ரூ.9800.00 |
| பணியின் பெயர் | 2. கணினி மற்றும் பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் | |
| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
| 1. | மெர்குரி சாப்ட்வேர் நிறுவனம் | கணினி –ரூ.3300.00<br>லேசர் பிரிண்டர் –ரூ.950.00<br>டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் –ரூ.500.00 |
| 2. | யுனைடேட் இன்போ டெக் நிறுவனம் | கணினி –ரூ.3500.00<br>லேசர் பிரிண்டர் –ரூ.1000.00<br>டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் –ரூ.600.00 |

அலுவலகக் குறிப்பு:– வரிசை எண்.1ல் காணும் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6830/2018/சி1)

தீர்மான எண், நாள் 558, நாள்.31.12.2018

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.11

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு பணியாளர்கள் (DBC) நபர் ஒன்றிற்கு 50 வீடுகள் வீதம் தினசரி குறியீடு நிர்ணயம் செய்து டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் போது தினசரி பணி அளவீட்டு பதிவேடு பராமரிக்க வேண்டிய சூழ்நிலையில் மேற்கண்ட கணக்கெடுப்பு பணி பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தில் தான் மேற்கொள்ள வேண்டும் என பொது சுகாதார இணை இயக்குநர், தேனி மாவட்ட பூச்சியியல் வல்லுநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்கவும் மேலும் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை ஆய்வின் போது சமர்பிக்க வேண்டியுள்ளதால் டெங்கு பணியாளர்கள் தினசரி பணி அளவீட்டு படிவம் 20000 எண்ணம் அட்சிட்டு வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.30000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட IEC செயல்பாடுக்காக பயன்படுத்தப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**<br>**3. மேற்கண்ட பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு வெளியீட்டை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7435/2018/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **559, நாள்.31.12.2018** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******